தலைப்பு 304 – வளிமண்டலவியல் திணைக்களம்

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 304 – வளிமண்டலவியல் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வளிமண்டலவியல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 19 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வளிமண்டலவியல் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் வளிமண்டலவியல் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை வளிமண்டலவியல் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக

காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கைகளின்படி திணைக்களத்தின் நிலங்களின் பெறுமதி ரூபாய் 3,274,000,000 என்றாலும், 2024 டிசம்பர் 31 திகதியாகும் போது கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமை பற்றிய அறிக்கையில் நிலங்களின் பெறுமதி ரூபா 3,280,735,702 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது, இதில் நில மேம்பாட்டுச் செலவுகள் ரூபாய் 6,735,702 அடங்கும்.	2014 ஆம் ஆண்டின் மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு கூடுதலாக, நில மேம்பாட்டுச் செலவு என்ற தலைப்பின் கீழ் 2013 ஆம் ஆண்டு முதல் 2024 டிசம்பர் 31 தகதி வரை அதிகரித்த சில செலவுகள் ”நிலம்” என்ற சொத்து பிரிவின் கீழ் மூலதனமாக்கப்பட்டுள்ளன. இந்தச் செலவுகள் அனைத்தும் உண்மையில் நில மேம்பாட்டுச் செலவுகளா என்பதைக் கண்டறிந்து இந்த பெறுமதியைச் சரிசெய்ய 2025 ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.	வித்தியாசங்களுக்கான காரணங்கள் ஆராயப்பட்டு தேவையான சரிசெய்தல் செய்யப்பட வேண்டும்.

(ஆ)	திணைக்களத்திற்குச் சொந்தமான 10 வாகனங்களின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூபாய் 49,950,000 என்றாலும், 2024 டிசம்பர் 31 திகதியாகும் போது நிதி நிலைமை பற்றிய அறிக்கையின்படி 7 வாகனங்களின் பெறுமதி ரூபா 34,175,000 மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மீதமுள்ள 03 வாகனங்களின் பெறுமதி ரூபாய் 16,500,000 பெறுமதி கணக்கில் குறிப்பிடப்படவில்லை.	2012 ஆம் ஆண்டில், இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 7 வாகனங்கள் மட்டுமே மதிப்பிடப்பட்டுள்ளன, அவற்றின் மொத்த பெறுமதி ரூபாய் 34,175,000.00 ஆகும். 2018 ஆம் ஆண்டில், அந்த 7 வாகனங்கள் மட்டுமே CIGAS திட்டத்தில் நிலையான சொத்துக்களாகக் கணக்கிடப்பட்டுள்ளன. இருப்பினும், 2024 ஆம் ஆண்டில், 10 வாகனங்கள் மதிப்பிடப்பட்டு, அந்த 10 வாகனங்கள் 2025 ஆம் ஆண்டில் கணக்கு வைக்கப்பட்டுள்ளன. அதன்படி, பெறுமதி ரூபாய் 16,500,000 வான எஞ்சியுள்ள 03 வாகனங்களும் புதிய மதிப்பீட்டு அறிக்கையின் படி இந்த ஆண்டில் கணக்கு வைக்கப்படடுள்ளன.	கணக்கு வைக்கப்படாட சகல சொத்துக்களையும் அடையாளம் கண்டு, கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	உலக வங்கி கடன் உதவியின் கீழ் செயல்படுத்தப்பட்ட காலநிலை தாக்கங்களை குறைக்கும் பல-நிலை அணுகுமுறை (CResMPA) திட்டத்தின் கீழ் வளிமண்டலவியல் திணைக்களத்தின் கண்காணிப்பு வலையமைப்பை மேம்படுத்துவதற்காக அங்கீகரிக்கப்பட்ட 4.5 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கீட்டின் கீழ், மேற்படி திட்டத்திலிருந்து பெறப்பட்ட ரூபாய் 23,395,371 பெறுமதியுள்ள பொருட்கள் மற்றும் உபகரணங்கள், 2024 டிசம்பர் 31 திகதிய கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலைமை பற்றிய அறிக்கைகளில் நிதி அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கு வைக்கப்படாத	இந்தப் பொருட்கள் அனைத்தும் 2025 ஆம் ஆண்டில் நிலையான சொத்துக்களாகக் கணக்கு வைக்கப்பட்டுள்ளன.	கணக்கு வைக்கப்படாட சகல சொத்துக்களையும் அடையாளம் கண்டு, கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்..

காரணத்தினால் நிதி அல்லாத சொத்துக்கள் மற்றும் சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள் இருப்பு அந்த பெறுமதியில் குறைத்து காட்டப்பட்டுள்ளது.

1.6.2. அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
சேவையை கைவிட்டுச் சென்றுள்ள ஒரு அதிகாரியிடமிருந்து 13 ஆண்டுகளுக்கும் மேலாக அறவிடப்பட வேண்டிய பணம் ரூபாய் 121,830, வெளிநாடு சென்று மீள வேலைகளை பொறுபேற்காத ஒரு அதிகாரியிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபாய் 145,568 மற்றும் சேவையில் இருந்து இராஜானாமா செய்த ஒரு அதிகாரியிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபாய் 110,256 என கூட்டுத்ததொகை ரூபாய் 377,654 அறவிடப்பட்டிருக்கவில்லை.	கடனை அறவிடுவதற்கு, சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் பிணையாளர்களிடம் இருந்து அறவிடுவதாகவும் அறவித்து கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும்.	அதிகாரிகளின் நிலுவைக் கடனை மீதிகளை உடனடியாக அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

3. நிதி மீளாய்வு

3.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைப்பு	பரிந்துரை
(அ) மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டிற்கான அனைத்து சரிசெய்தல்களையும் செய்த	304-02-01-16-2509 (13) மற்றும் (17) இன் கீழான ஒதுக்கீட்டு பெறுமதியில் ரூபாய் மில்லியன்	திறைசேரி ஒதுக்கீடுகளை உரிய முறையில்

	பிறகு, தேறிய ஒதுக்கீடு ரூபாய் 1,912,600,000 ஆகவும், மொத்த செலவு ரூபாய் 486,121,648 ஆகவும் இருந்தது. அதன்படி, எஞ்சிய தொகை ரூபாய் 1,426,478,352 ஆக இருந்தது, எனவே ஒதுக்கீட்டில் எஞ்சியவை மொத்த தேறிய ஒதுக்கீட்டில் 75 சதவீதம் ஆகவும், மொத்த பயன்பாட்டில் 25 சதவீதம் ஆகவும் இருந்தது.	1396.22 வும் டொப்ளர் ரேடார் திட்டத்திற்காக பெறப்பட்ட ஒதுக்கீட்டிலிருந்து சேமிக்கப்பட்ட தொகையாகும், மேலும் இந்த திட்டம் ஜப்பானிய உதவியின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டம் என்பதுடன் மீதமுள்ள பணிகளும் அவர்களின் ஆலோசனையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த டொப்ளர் ரேடார் கோபுர கட்டிடத்தின் கட்டுமானப் பணிகள் 2024 டிசம்பர் 23 திகதியாகும் போது, இந்தப் பணி திணைக்களத்தின் நிர்வாகத்திற்கு அப்பால் மேற்கொள்ளப்படுகிறது.	பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	304-02-01-16-2509 (13) மூலதன செலவு விடயத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூபாய் மில்லியன் 1,382 முழு ஒதுக்கீடும் மற்றும் 304-02-01-16-2509 (17) மூலதன செலவு விடயத்திற்காக ரூபாய் மில்லியன் 19.2 ஒதுக்கீடும் எஞ்சியது.	டொப்ளர் ரேடார் செயற்றிட்ட விடயங்களின் கீழ் கட்டுமானப் பணிகளை ஆரம்பிப்பது தாமதப்பட்டதன் காரணமாக ஒதுக்கீடுகள் எஞ்சியது.	திறைசேரி ஒதுக்கீடுகளை உரிய முறையில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதிப் பிரமாணக் குறிப்பு ஒழுங்குமுறை 94(i) இன் விதிகளுக்கு மாறாகச் செயல்பட்டு, செலவு விடயங்கள் இரண்டிற்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளின் மீதத்தை தாண்டி மொத்தம் ரூபாய் 1,962,401 பொறுப்புக்கள் காணப்பட்டது.	இந்த செலவு விடயங்களுக்காக வேறு எஞ்சிய செலவு விடயங்களில் இருந்து ஒதுக்கீடுகளை மாற்றிக் கொள்வதற்கு உட்பட்டு, 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசிய கொள்வனவுகளுக்கான குறிப்பிடப்பட்ட செலவு விடயங்களின் கீழ் கடப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டன.	நிதிப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் செயற்பட வேண்டும்.
(ஆ)	நிறைவேற்றப்படாத கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளுக்குத் தேவையான ஏற்பாடுகள் அடுத்த ஆண்டிற்கு ஒதுக்கப்பட்டிருந்தால் மட்டுமே கடப்பாடுகள் மற்றும்	இதற்கு 2025 ஆண்டில் மேலதிக ஒதுக்கீடாக ரூபாய் 6,700,000 க்கு பொது திறைசேரியில் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.	சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டும்.

	பொறுப்புகளை அடுத்த ஆண்டுக்கு முன்னோக்கி எடுத்துச் செல்ல முடியும் என்றாலும், இதற்கு மாறாக, செலவு விடய இலக்கம் 2001 இற்காக 2025 ஆம் ஆண்டின் வரவு செலவு ஒதுக்கீடாக ரூபாய் 3,000,000 ஆக இருந்த நிலையில், ரூபாய் 8,079,750 இக்கு பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.		
(இ)	செலவு விடய இல. 2001 இன் பொறுப்பு மதிப்பு ரூபாய் 8,079,750 வரை இருந்தபோதிலும், திறைசேரியால் பராமரிக்கப்படும் திரட்டப்பட்ட பொறுப்பு அறிக்கையில் உள்ளடக்கப் பட்டிருப்பது 2024 டிசம்பர் 31 திகதிக்கு உள்ள பொறுப்பாக ரூபாய் 6,700,000 மட்டுமே ஆகும்.	CIGAS திட்டத்தின் கீழ் வருடாந்த ஒதுக்கீட்டை விட அதிகமான பொறுப்புகளை உள்ளிட அனுமதிக்கப்படாததால், 304-2-1-0-2001 செலவு விடயத்தின் கீழ் மீதமுள்ள ரூபாய் 6,700,000 ஒதுக்கீட்டிற்கு மட்டுமே பொறுப்புகள் உள்ளிடப்பட்டன.	வருடாந்த ஒதுக்கீட்டை தாண்டி பொறுப்புகளை ஏற்படுத்திக் கொகாள்ளக் கூடாது.

3.3 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிபடுத்தல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைப்பு	பரிந்துரை
திணைக்களத்தின் நிதி நிருவாகத்திற்காக விளைத்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை தயாரித்து நடாத்திச் செல்வதாக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டும். அந்த முறைமையின் விளைத்திறனை அவ்வப்போது மீளாய்வு செய்து, அதற்கமைய முறைமையை திறம்படச் செய்ய தேவையான மாற்றங்களைச் செய்வதையும் உறுதி செய்ய வேண்டும். அந்த மீளாய்வை எழுத்துப்பூர்வமாக செய்யப்பட்டு, அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்க வேண்டும். ஆனால், அத்தகைய மீளாய்வு நடத்தப்பட்டதாக அறிக்கைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	இந்த மீளாய்வு அறிக்கை தயாரிக்கப்பட்ட வண்ணம் உள்ளதாகவும், அதை தயாரித்து முடிந்தவுடன் சமர்ப்பிக்கப்படும்.	2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டும்.

3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	அவதானிப்பு பெறுமதி ரூபா	இணங்காமை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) உப பிரிவு	-	2024 ஆம் ஆண்டுக்கான நிதிநிலைமை பற்றிய அறிக்கைகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை கணக்கீட்டு அதிகாரி கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கவில்லை.	2023 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை 2024.06.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டும்.
(ஆ)	**அரச நிருவாக சுற்றறிக்கை**				
(i)	2008 பெப்ரவரி 06 திகிதியிட்ட சுற்றறிக்கை இலக்கம் 05/2008- 1.4 XVIII பிரிவு		நிறுவனத்தின் மூலம் பிரஜைகள் சட்டவாக்கம் ஒன்று தயாரிகப்பட்டு இருந்து போதிலும், சேவை சட்டவாக்கம் தொடர்பில் கருத்துக்களை பெறுவதற்கு மற்றும் செயலாற்றுகை கணக்காய்வுக்கு பொருத்தமான கட்டமைப்பை நிறுவுவதற்கும் குறைந்தபட்சம் 6 மாதங்களுக்கு ஒரு முறையாவது சட்டவாக்கம் பற்றிய மீளாய்வு செய்யப்பட்டு இருக்கவில்லை.	திணைக்களத்தின் சட்டவாக்கம் இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது, மேலும் தொலைநோக்கு, பணி மற்றும் சேவை பெறுநர்கள் தொடர்புடைய இடங்களை சரியாக அணுக அனுமதிக்கும் வகையில் காட்சிப் பலகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், மீளாய்வு நோக்கங்களுக்காக தேவையான தகவல்களைப் பெறுவதற்கான பணிகள் நடந்து வருகின்றன.	சுற்றறிக்கை இன் ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டும்.

(ii)	2019 ஏப்ரல் 19 ஆம் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 3/2017, 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய இல. 09/2009 மற்றும் 2001 ஆகஸ்ட் 07 திகதிய 15/2001	24,318,541	நேரத்தை அடிப்படையாக் கொண்டு மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவு ஆகிவை வழக்கமான கடமை நேரங்களுக்கு மேலதிகமான நேரங்களுக்கு வழங்கப்பட்டாலும், அத்தகைய நேரத்தை கைரேகை இயந்திரங்கள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும், ஆனால 2024 ஆம் ஆண்டுக்கான விடுமுறை தின கொடுப்பனவு மற்றும் மேலிதக நேரக் கொடுப்பனவுகளாக ரூபாய் 24,318,541 தொகை விரல் ரேகை இயந்திரங்கள் மூலம் பிராந்திய அலுவலகங்களுக்கு அதிகாரிகள் வருகை மற்றும் புறப்பாடுகளை உறுதிப்படுத்தாமல் செலுத்தப்பட்டுள்ளதை அவதானிக்கப்பட்டது.	அனைத்து மாவட்ட அலுவலகங்களின் வருகை மற்றும் புறப்பாடு பதிவுகள் சரிபார்க்கப்பட்டு, தலைமை அலுவலகங்களால் பெறப்பட்ட மேலிதக நேர வவுச்சர்கள், சம்பந்தப்பட்ட மேற்பார்வை அதிகாரியின் பரிந்துரைகளுடன் உரிய ஒப்புதலின் கீழ் செலுத்தப்பட்டன. ஜனவரி 2025 க்குள் அனைத்து அலுவலகங்களிலும் கைரேகை இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன, மேலும் பெறப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில் மேலதிக நேரம் கணக்கிடப்படும்.	சுற்றறிக்கை இன் ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டும்
(இ)	2017 சனவரி 16 திகதிய நிதி அமைச்சின் சுற்றறிக்கை இல. 08/2016	-	கொள்முதல் திட்டம் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்திற்கு ஏற்ப இருக்க வேண்டும் என்றாலும், நிறுவனத்தின் கொள்முதல் திட்டம் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படவில்லை.	2024 ஆம் ஆண்டில் இந்த விதிகள் அடிக்கடி திருத்தங்களுக்கு உட்பட்டதால், அந்த திருத்தங்களின்படி அந்த ஆண்டில் அவற்றை நடைமுறையில் செயல்படுத்த முடியவில்லை. இதனால், கடைசியாக திருத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளின்படி 2024 ஆம் ஆண்டில் தொடர்ச்சியான செலவினங்களுக்கான விண்ணப்பங்கள் செய்யப்பட்ட போதிலும், ஏற்பாடுகள்	சுற்றறிக்கை இன் ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டும்

		வழங்கப்படாததால் திருத்தப்பட்ட செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்படவில்லை.

4. செலாற்றல் மீளாய்வு

4.1 திட்டமிடுதல்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
கூட்டிணைந்த திட்டத்தில் CResMPA திட்டங்களின் கீழ் 17 உருப்படிகள் குறிப்பிடப்பட்டிருந்தாலும், 2024 இல் செயல்படுத்தப்பட வேண்டிய உருப்படிகள் தனித்தனியாக அடையாளம் காணப்பட்டு செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை, மேலும் அந்த உருப்படிகள் ஒவ்வொன்றின் முன்னேற்றமும் கணக்காய்வுக்க சமர்ப்பிக்கப்படவில்லை.	இதற்கான அனைத்து தகவல்களும் திணைக்களத்திடம் இல்லை, மேலும் இந்தத் தகவல் வேளாண்மை, நிலம், கால்நடை, நீர்ப்பாசனம், மீன்வளம் மற்றும் நீர்வள அமைச்சகத்தின் கீழ் உள்ள காலநிலை தாக்கத்தை குறைக்கும் பல-நிலை திட்ட அணுகுமுறையின் (CResMPA) திட்ட இயக்குநர் அலுவலகத்தில் உள்ளது. இந்த 17 பொருட்களை கொள்முதல் செய்தல் மற்றும் திணைக்களத்திற்கு வழங்குதல் உட்பட அனைத்து கொள்முதல் நடவடிக்கைகளும் CResMPA திட்ட இயக்குநர் அலுவலகத்தால் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தப் பொருட்களுக்கான விவரக்குறிப்புகள் மற்றும் பிற தேவைகளை எங்கள் திணைக்களம் CResMPA திட்ட இயக்குநர் அலுவலகத்திற்கு சமர்ப்பித்துள்ளது, மேலும் இந்தப் பொருட்கள் திணைக்களத்தால் பெறப்படும் வரை, அவற்றின் முன்னேற்றம் CResMPA திட்ட இயக்குநர் அலுவலகத்தைப் பொறுத்தது.	கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மீளாய்வு ஆண்டு தொடர்பான திட்ட உருப்படிகள் செயல் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

4.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 ஆம் ஆண்டுக்கான தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தின் செலவு உருப்படி இல. 2001 இன் கீழ், இரத்தினபுரி மற்றும் பொத்துவில் வளிமண்டலவியல் அலுவலகங்களின் புனரமைப்புக்காக ரூபா 10 மில்லியன் ஒதுக்கீடு	2024 ஆம் ஆண்டின் இறுதிக்குள், புத்தளம் மற்றும் மட்டக்களப்பு வளிமண்டலவியல் அலுவலகங்களின் அலுவலகங்கள் பாழடைந்து, இனி தங்கள் கடமைகளைச் செய்ய முடியாத அளவுக்கு, வசிக்க முடியாத அளவுக்கு மாறிவிட்டன. இதன் காரணமாக, 2024 திருத்தப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்ட	மீளாய்வு ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய கொள்முதல்கள் அடையாளம் காணப்பட்டு, சரியான ஆய்வு மற்றும் முன்னுரிமைகளுடன்

செய்யப்பட்டிருந்தது, மேலும் திருத்தப்பட்ட செயல் திட்டத்தின்படி, தலைமை அலுவலகம், இரத்தினபுரி, மகா இலுக்பள்ளம, திருகோணமலை மற்றும் கட்டுகஸ்தோட்டை வளிமண்டலவியல் அலுவலகங்களின் புனரமைப்புக்காக அதே ரூபா 10 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் இந்த புதுப்பிப்புகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், 2024 ஆம் ஆண்டுக்கான செயல் நடவடிக்கை திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின்படி, செலவு உருப்படி இல. 2001 க்கான அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகளில், புத்தளம் மற்றும் மட்டக்களப்பு வளிமண்டலவியல் அலுவலகங்களில் கொள்கலன் பெட்டிகளை நிறுவுவதற்கு ரூபாய் 2,154,600 முன்பணமாக செலுத்தப்பட்டுள்ளது, அவை செயல் நடவடிக்கை திட்டத்திலோ அல்லது கொள்முதல் திட்டத்திலோ சேர்க்கப்படவில்லை.	அலுவலகங்களுக்குப் பதிலாக புத்தளம் மற்றும் மட்டக்களப்பு வளிமண்டலவியல் அலுவலகங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, அந்த அலுவலகங்களின் புதுப்பித்தல் தொடங்கப்பட்டது, ஆனால் செயல் திட்டத்தைத் திருத்துவதற்கு நேரமிருக்கவில்லை. CResMPA திட்டத்தின் மூலம் அந்த அலுவலகங்களைப் புதுப்பிக்க கணிசமான நேரம் எடுக்கும் என்பதாலும், இந்த இரண்டு அலுவலகங்களையும் மூடுவது சாத்தியமில்லை என்பதாலும், தற்காலிகமாக கொள்கலன் பெட்டிகளை நிறுவ முடிவு செய்யப்பட்டது. எனவே, திருத்தப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்படாத கொள்கலன் பெட்டிகளை நிறுவுவதற்கும், பிற திணைக்களத் தேவைகளுக்கும் ரூபாய் 03 மில்லியன் தொகையை 2024 ஆம் ஆண்டில் முன்பணமாக செலுத்த வேண்டியிருந்தது.	திட்டமிடப்பட வேண்டும்.

4.3 செயற்றிட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	வளிமண்டலவியல் திணைக்களத்தின் வானிலைத் தகவல்களைக் கண்காணிக்கவும், முன்னறிவிக்கவும், பரப்பவும் திறனை மேம்படுத்தும் நோக்கில், புத்தளம் வானிலை நிலைய தளத்தில் உள்ள டாப்ளர் ரேடார் அமைப்பு (JICA) 2019 முதல் 2024 வரை ஒதுக்கப்பட்டது, இருப்பினும் ரூபாய் 1,965.08 மில்லியன் ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டது, ஆனால் 2024 டிசம்பர் 31 திகதிக்கு செலவு	புத்தளம் வானிலை ரேடார் திட்டத்தை செயல்படுத்துவதில் ஏற்பட்ட தாமதம், திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களால் ஏற்பட்டது. 2019 ஏப்ரல் இல் ஈஸ்டர் தாக்குதல்கள் மற்றும் கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக விதிக்கப்பட்ட சுகாதார கட்டுப்பாடுகள் காரணமாக இந்த திட்டம் தாமதமானது. சர்வதேச டெண்டர் 2021 இல் ஜப்பானில் நடைபெற்றது, அதற்கு ஒரே ஒரு	செயற்றிட்டங்களை உரிய காலகட்டத்திற்குள் முடிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	ரூபாய் மில்லியன் 0.740 மில்லியன் மட்டுமே காணப்பட்டது. ஒப்பந்தம் கையெழுத்தாகி 06 ஆண்டுகள் (2019-2025) கடந்துவிட்டாலும், ரேடார் அமைப்பின் கட்டுமானம் 2020 ஆம் ஆண்டின் இறுதிக்குள் முடிக்கப்படவிருந்தாலும், திட்டத்தின் கட்டுமானப் பணிகள் 2024 டிசம்பரில் புத்தளத்திலும், உபகரணங்களின் உற்பத்தி ஜப்பானிலும் தொடங்கப்பட்டன. இதன் காரணமாக, 2024 டிசம்பர் 31, திகதிக்கு திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 25 சதவீதம் மட்டுமே காணப்பட்டது.	நிறுவனம் மட்டுமே பதிலளித்தது. உலகளாவிய விலை உயர்வு மற்றும் பொருளாதார உறுதியற்ற தன்மை காரணமாக வணிக அபாயங்களைக் கருத்தில் கொண்டு அந்த நிறுவனமும் பின்னர் டெண்டரிலிருந்து விலகியது. இந்த திட்டம் JICA மானிய நிதியை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், இது வரி இல்லாத திட்டமாகக் கருதப்பட வேண்டும். அதன்படி, உள்ளூர் வரிகளை (உ.தா. VAT, NBT, PAL) இலங்கை அரசு செலுத்த வேண்டும். இதற்குத் தேவையான ஒதுக்கீடுகள் கோரப்பட்டாலும், 2021 இல் தொடங்கப்பட்ட கொள்முதல் செயல்முறை தோல்வியடைந்த பிறகு நிதியை செலவிட முடியவில்லை. துஐஊயு 2024 இல் கொள்முதல் செயல்முறையை மீண்டும் தொடங்கியது. 2024.04.26 அன்று கையெழுத்திடப்பட்ட திருத்தப்பட்ட ஒப்பந்தத்தின்படி, அதன் காலம் 2028.07.15 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. அதன்படி, JICA இந்த திட்டத்தின் பணிகளை மீண்டும் தொடங்கியுள்ளது, தற்போது அது முறையாக முன்னேறி வருகிறது.	
(ஆ)	உலக வங்கியின் நிதியுதவியுடன் கூடிய காலநிலை தாக்கத்தை குறைக்கும் பல-நிலை அணுகுமுறை (CResMPA) திட்டம் (2021-2026) வளிமண்டலவியல் திணைக்களத்தின் கண்காணிப்பு வலையமைப்பை மேம்படுத்துவதற்காக 4.5 மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் அங்கீகரிக்கப்பட்டது, ஆனால் 2024 டிசம்பர் 31 திகதிக்கு ஒட்டுமொத்த செலவு 0.85 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. ஒப்பந்தம்	எங்கள் திணைக்களத்திடம் இதற்கான அனைத்து தகவல்களும் இல்லை என்றாலும், வேளாண்மை, நிலம், கால்நடை, நீர்ப்பாசனம், மீன்வளம் மற்றும் நீர்வள அமைச்சகத்தின் கீழ் உள்ள காலநிலை தாக்கங்களை குறைத்தல் பல-நிலை திட்ட அணுகுமுறையின் (CResMPA) திட்ட இயக்குநரக அலுவலகத்தில் இந்தத் தகவல்கள் கிடைக்கின்றன. இந்த அங்கீகரிக்கப்பட்ட பணத்தின் செலவினத்திற்கான அனைத்து கொள்முதல் நடவடிக்கைகளும்	செயற்றிட்டங்களை உரிய காலகட்டத்திற்குள் முடிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

கையெழுத்தாகி 03 ஆண்டுகள் கடந்துவிட்டாலும், 2024 டிசம்பர் 31 திகதிக்கு திட்டத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றம் 40 சதவீதம் மட்டுமே காணப்பட்டது.	CResMPA திட்ட இயக்குநரக அலுவலகத்தால் மேற்கொள்ளப்படும், மேலும் வளிமண்டலவியல் திணைக்களம் இந்த கொள்முதல்களில் சிலவற்றிற்கான விவரக்குறிப்புகள் மற்றும் பிற தேவைகளை CResMPA திட்ட இயக்குநரக அலுவலகத்திற்கு சமர்ப்பித்துள்ளது, மேலும் செலவினங்கள் CResMPA திட்ட இயக்குநரக அலுவலகத்தால் மேற்கொள்ளப்படும்

4.4 பெறுகைகள்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 ஆம் ஆண்டுக்கான சமர்ப்பிக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தின்படி, நிதி பற்றாக்குறை, தேவையான தரநிலைகள் இல்லாமல் பொருட்களை வழங்குதல் மற்றும் TRCSL ஒப்புதல் பெறாதது போன்ற காரணங்களால், ஆண்டு முழுவதும் முடிக்க எதிர்பார்க்கப்பட்ட ரூபாய் மில்லியன் 10 மதிப்புள்ள 04 கொள்முதல்கள், அந்த ஆண்டில் முடிக்கப்படாமல் போயின.	சில செலவு விடயங்களுக்கு போதுமான நிதி இல்லாததால், தேவையான உபகரணங்கள் முன்னுரிமை அடிப்படையில் வாங்கப்பட்டன, மேலும் சில உபகரணங்களை வாங்குவதை நிறுத்தி வைக்க வேண்டியிருந்தது. மேலும், சில உபகரணங்களை இறக்குமதி செய்யும் நிறுவனம் TRCSL-இடம் ஒப்புதல் பெறுவதில் தாமதமானது, எனவே 2024 டிசம்பர் 31 இற்குள் பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.	கொள்முதல் திட்டத்தின் படி, வேலைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ) புத்தளம் பிராந்திய அலுவலகம்		
புத்தளம் பிராந்திய அலுவலகங்களுக்கு பொருட்களை வழங்கும் போது, தலைமை	அலுவலகத் தேவைக்கேற்ப உலக வங்கி திட்டத்தின் கீழ் இந்தப் பொருட்கள்	உரிய இயந்திரங்கள் மற்றும் பிற

அலுவலகம் அலுவலகத்தின் தேவைகள், கிடைக்கக்கூடிய இடம் மற்றும் பொருட்களின் நீடித்து உழைக்கும் தன்மை ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளாமல் ரூபாய் 236,000 மதிப்புள்ள 02 Lobby Chair நாற்காலிகளை வழங்கியது, மேலும் அவை பயன்படுத்தப்படாமல் இருந்தன. மேலும், தேவையை அடையாளம் காணாமல் வழங்கப்பட்ட HD Web Cam சாதனம் கணக்காய்வு திகதிக்குள் பயன்படுத்தப்படவில்லை மற்றும் அலுவலகத்தில் காட்சிப்படுத்துவதற்காக வழங்கப்பட்ட அறிவிப்பு பலகை மற்றும் 1:500000 இலங்கை வரைபடம் ஆகியவை காட்சிப்படுத்தப்படவில்லை.	வாங்கப்பட்டுள்ளன, மேலும் அலுவலகத்தின் நவீனமயமாக்கலுடன் எதிர்காலத்தில் இந்தப் பொருட்கள் தேவைப்படும். ரேடார் திட்டத்துடன் அலுவலகத்தில் சில இடப் பற்றாக்குறை இருந்ததால், இளைப்பாறும் அறையில் உள்ள நாற்காலிகளை தற்காலிகமாகப் பயன்படுத்தப்பட்டது, மேலும் இந்தப் பொருட்களைப் பெற்ற பிறகு கொள்கலன் பெட்டிகளால் ஆன கட்டிடம் கட்டப்பட்டது, மேலும் இந்தப் பொருட்கள் எதிர்காலத்தில் பயன்படுத்தப்படும். அவசர காலங்களில் நிகழ்நிலை கூட்டங்களை நடத்துவதற்கான திணைக்கள ரீதியான முடிவின்படி ஒவ்வொரு வளிமண்டலவியல் அலுவலகத்திற்கும் ஒரு web cam வழங்கப்பட்டது, மேலும் எதிர்காலத்தில் திணைக்கள ரீதியான தேவைக்கேற்ப பயன்படுத்தப்படும். மேலும், ஒரு இடத்தின் இருப்பிடம் அல்லது வேறு ஏதேனும் தேவையான விடயங்களைச் சரிபார்க்க ஒவ்வொரு வளிமண்டலவியல் அலுவலகத்திற்கும் இலங்கையின் வரைபடம் வழங்கப்பட்டது.	சொத்துக்களை உரிய முறையில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) காலி பிராந்திய அலுவலகம்

தலைமை அலுவலகத்தால் காலி பிராந்திய அலுவலகத்திற்கு பொருட்களை வழங்கும்போது, ரூபாய் 236,000 பெறுமதியுள்ள 02 Lobby Chair நாற்காலிகள் அலுவலகத்தின் தேவை மற்றும் இருப்பிடத்தை அடையாளம் காணாமல் வழங்கப்பட்டன, எனவே அவை 04 மாதங்கள் கடப்பதற்கு முன்பே துருப்பிடித்து பயன்படுத்தப்படாமல் இருந்தன. மேலும், தேவையை அடையாளம் காணாமல் வழங்கப்பட்ட Web Cam உபகரணங்கள் மற்றும் 2TB Hard சாதனம் பயன்படுத்தப்படவில்லை, மேலும் அலுவலகத்தில் காட்சிப்படுத்துவதற்காக	அலுவலகத் தேவைக்கேற்ப உலக வங்கி திட்டத்தின் கீழ் இந்தப் பொருட்கள் வாங்கப்பட்டுள்ளன, மேலும் அலுவலகத்தின் நவீனமயமாக்கலுடன் எதிர்காலத்தில் இந்தப் பொருட்கள் தேவைப்படும். இந்த நாற்காலிகள் மற்றும் பிற பொருட்கள் எதிர்காலத்தில் முறையாக வைக்கப்படும். அவசர காலங்களில் நிகழ்நிலை கூட்டங்களை நடத்த ஒவ்வொரு வளிமண்டலவியல் அலுவலகத்திற்கும் ஒரு web cam வழங்கப்பட்டுள்ளது, மேலும் கணினி எந்த வகையிலும்	தேவைப்பாட்டை கண்டறிந்து இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பிராந்திய அலுவலகங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	வழங்கப்பட்ட 1:500000 இலங்கை வரைபடம் மற்றும் அறிவிப்பு பலகை கணக்காய்வு திகதிக்குள் கூட காட்சிப்படுத்தப்படவில்லை. மேலும், அறிவிப்பு பலகை பொருட்கள் பட்டியல் பதிவேட்டில் சேர்க்கப்படவில்லை.	முடக்கப்பட்டால் அந்த அலுவலகத்தின் வானிலை தரவு கிடைக்காது என்பதால், பாதுகாப்பான தரவு சேமிப்பகமாக (காப்புப்பிரதி) பயன்படுத்த 2TB Hard disk வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்த உபகரணங்கள் பொருட்கள் பட்டியல் புத்தகத்தில் இருந்து விடுபட்டுள்ளதால், அதை உடனடியாகச் சேர்க்க நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் வரைபடம் மற்றும் அறிவிப்பு பலகை ஆகியவை பொருட்கள் பட்டியல் பதிவேட்டில் முறையாக சேர்க்கப்பட்டுள்ளன.	
(இ)	திணைக்களத்திற்குச் சொந்தமான ரூபாய் 4,000,000 விலையுள்ள 57-8845 என்ற வண்டி பல ஆண்டுகளாக சேவையில் இல்லாமல் இருந்தது, 2024 மே இல் ரூபாய் 796,200 செலவில் பழுதுபார்க்கப்பட்டு 03 மாதங்கள் மட்டுமே இயக்கப்பட்டு மீண்டும் சேவையில் இருந்து நீக்கப்பட்டது. பெரும் செலவில் பழுதுபார்க்கப்பட்ட வாகனத்தை பயன்பாட்டிற்கு ஏற்றதாக மாற்ற தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அதேபோல், ரூபாய் 5,400,000 விலையுள்ள PC-1140 மற்றும் ரூபாய் 2,900,000 விலையுள்ள PA-4029 கெப் வண்டிகள் பழுதுபார்க்கும் பணிகள் இல்லாததால் சேவையில் இருந்து நீக்கப்பட்டிருந்தாலும், அந்த வாகனங்களை சேவையில் ஈடுபடுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.	இந்த வாகனம் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக சேவையில் இல்லை, மேலும் 2024 இல் இயந்திர பழுதுபார்ப்புக்குப் பிறகு சேவையில் சேர்க்கப்பட்டது. சில மாதங்கள் செயல்பட்ட பிறகு வாகனத்தில் டயர்கள் மற்றும் விளிம்புகள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும் என்றாலும், 2024 இல் குறைந்த நிதி காரணமாக இந்த வாகனத்திற்கு டயர் மற்றும் விளிம்பு கருவிகளைப் பொருத்த முடியவில்லை. டயர் மற்றும் விளிம்பு கருவிகள் 2025 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் பொருத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், PC-1140 மற்றும; PA-4029 வாகனங்களின் பழுதுபார்ப்புக்கான அனைத்து கொள்முதல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு பழுதுபார்ப்புக்காக அனுப்பப்படும்.	வாகனங்களை முறையாக பழுதுபார்த்து சேவையில் ஈடுபடுத்த வேண்டும்.
(ஈ)	வளிமண்டலவியல் திணைக்களத்தில் நிறுவப்பட்ட 37 தானியங்கி வளிமண்டலவியல் நிலையங்களில் 04 நிலையங்கள் செயலிழந்துள்ளன, மேலும் 02	31 தானியங்கி வானிலை நிலையங்களின் தரவை Online அல்லது Offline பெறலாம். மீதமுள்ள அமைப்புகளில், திருகோணமலை அலுவலகத்தில்	செயல்படாத தானியங்கி வளிமண்டலவியல் நிலையங்களை இயங்கும்

	நிலையங்கள் அகற்றப்பட்டுள்ளன. அவசரகால வானிலை நிலைகளில் தானியங்கி தரவுகளைப் பெறும் திறன் மிகவும் முக்கியமானது, ஆனால் இந்த செயலற்ற நிலையங்களை செயல்பாட்டு நிலைக்கு பராமரிக்கவும் மீட்டெடுக்கவும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.	ஒரு அமைப்பை நிறுவுவதற்கான ஆரம்ப பணிகள் நிறைவடைந்துள்ளன, மேலும் அதற்கான பல பொருட்களை வாங்க கொள்முதல் திணைக்களத்திற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. முல்லைத்தீவு அலுவலக வளாகத்தில் மற்றொரு அமைப்பை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. மற்ற அமைப்புகளின் தரவு சேமிப்பில் உள்ள குறைபாடுகளை ஈடுசெய்ய தேவையான உதிரி பாகங்கள் தற்போது உற்பத்தியில் இல்லாததால், JICA திட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட தரவு சேமிப்பு அமைப்புகள் உலக வங்கி திட்டத்தின் மூலம் கட்டளை செய்யப்பட்டுள்ளன. அவற்றைப் பெற்ற பிறகு, சோதனையை முடித்து எல்லாவற்றையும் முழுமையாக செயல்படுத்த முடியும்.	நிலைக்கு கொண்டுவர வேண்டும்.
(உ)	தீவு முழுவதும் 460 வழக்கமான மழைமானிகள் பரவி காணப்படுள்ளதுடன் தற்போதைய செயல்திறன் மற்றும் தரவு பெறுகையின் படி, 420 வழக்கமான மழைமானிகளிலிருந்து மட்டுமே தரவு பெறப்படுகிறது, மேலும் 40 மழைமானிகளிலிருந்து தொடர்ந்து தரவு பெறப்படவில்லை. இந்த மழைமானிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படவில்லை, மேலும் அகற்றப்பட்ட நிலையங்களின் எண்ணிக்கை 03 ஆகும்.	இந்தச் சாதனங்களைப் பயன்படுத்தி எங்களுக்குத் தரவை வழங்குவது வெளிப்புறக் கட்சிகளால் வழங்கப்படும் ஒரு தன்னார்வ சேவையாகும், மேலும் சாதனங்களை சுத்தமாக வைத்திருப்பதற்கும் சுற்றியுள்ள சூழலைப் பராமரிப்பதற்கும் அவர்கள் பொறுப்பு, மேலும் இவற்றில் சிறப்பு பராமரிப்பு எதுவும் மேற்கொள்ளப்படுவதில்லை. எதிர்காலத்தில் கிடைக்கக்கூடிய ஏற்பாடுகளின் அடிப்படையில் எங்களால் முடிந்தவரை பராமரிப்பு மேற்கொள்ளப்படும்.	தொடர்ச்சியான தரவை வழங்காத மழைமானிகள், தொடர்ச்சியான தரவை வழங்குவதற்காக சரிசெய்யப்பட வேண்டும்.
(ஊ)	திணைக்களத்தினால் 122 தானியங்கி மழைமானிகள் நிறுவப்பட்டுள்ளன, 2024 டிசம்பர் 31, நிலவரப்படி, 84 மழைமானிகள் மட்டுமே செயல்பாட்டில் இருந்தன, 33 செயல்படவில்லை. இது சரியான பராமரிப்பு இல்லாததாலும், அகற்றப்பட்ட	இந்த 122 தானியங்கி மழைமானிகளில், 22 அமைப்புகள் ஏற்கனவே அவற்றை நிறுவிய நிறுவனத்தின் உத்தரவாதக் காலத்திற்குள் உள்ளன. இவற்றில் 12 தற்போது செயல்படவில்லை, மேலும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு	செயலற்ற மழைமானிகளை செயல்பாட்டுக்குக் கொண்டு வந்து முறையாகப் பராமரிக்க வேண்டும்.

நிலையங்களின் எண்ணிக்கை 05 ஆகவும் காணப்பட்டது.	அறிவிக்கப்பட்டுள்ளன. முன்னதாக, இந்த 12 இல் 09 ஐ சரிசெய்ய கடிதங்கள் அனுப்பப்பட்டன. மீதமுள்ள 100 இல் 74 தற்போது செயல்படும் நிலையில் உள்ளன. 05 அகற்றப்பட்டுள்ளன. அவை அடையாளம் காணப்பட்டு புதிய இடங்களில் நிறுவப்பட உள்ளன. மீதமுள்ள 21 அமைப்புகள் பழுதுபார்க்கப்பட்டு வருகின்றன.	

4.6 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் (ICAO) பரிந்துரைகளின்படி விமான நிலையங்களுக்கு வானிலை தரவுகளை வழங்குவதன் முக்கிய நோக்கம் வானிலை பேரழிவுகளிலிருந்து விமானங்களையும் விமான நிலையங்களையும் பாதுகாப்பதாகும் என்றாலும், கட்டுநாயக்க வளிமண்டலவியல் அலுவலகம் METAR மற்றும் யாழ்ப்பாண அலுவலகத்தால் வெளியிடப்பட்ட கணித மாதிரி தரவுகளைப் பயன்படுத்தி பலாலி விமான நிலையத்திற்கான விமான நிலைய வானிலை முன்னறிவிப்புகளை (TAF) வெளியிட்டது. அந்த அலுவலகத்தின் முன்னறிவிப்புகளின் துல்லியத்தை சரிபார்க்க இடத்திலேயே தரவு இல்லாததால், பலாலி விமான நிலையத்திற்கு TAF வழங்குவது 2023 யூன் 01, முதல் இடைநிறுத்தப்பட்டது.	இடத் தரவைப் பெறுவதற்குத் தேவையான உபகரணங்களைப் பெறுவதற்கு, 2025 மே இன் பிற்பகுதியில் விமான நிலையம் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து ஆணைக்குழுவின் தொடர்புடைய அதிகாரிகளுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.	இடத் தரவைப் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.
(ஆ)	வளிமண்டலவியல் திணைக்களத்திடம் 18 உத்தியோகபூர்வ இல்லங்கள் இருந்தபோதிலும், அவற்றில் 14	கடந்த ஆண்டுகளில் இந்த உத்தியோகபூர்வ இல்லங்களைப் புதுப்பிப்பதற்கு போதுமான நிதி இல்லாததால், பல	உத்தியோகபூர்வ இல்லங்கள் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு

	மட்டுமே பயன்பாட்டில் இருந்தன. பொத்துவில், புத்தளம், நுவரெலியா மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உள்ள உத்தியோகபூர்வ இல்லங்கள் பாழடைந்த நிலையில் இருந்ததால், அவற்றைப் பயன்படுத்த ஏற்றதாக மாற்ற உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. மேலும், பயன்பாட்டில் இல்லாத உத்தியோகபூர்வ இல்லங்களில் ஆகஸ்ட் 2024 வரை நீர் கட்டணங்களுக்கு ரூபாய் 60,217 மற்றும் மின்சாரக் கட்டணங்களுக்கு ரூபாய் 50,653 செலுத்தப்பட்டுள்ளன.	உத்தியோகபூர்வ இல்லங்கள் படிப்படியாகப் பழுதடைந்தன. சிறிய பழுதுபார்ப்புகள் மேற்கொள்ளப்பட்டாலும், அவற்றை முறையாகப் பராமரிக்க முடியவில்லை. உலக வங்கி திட்டத்தின் (CResMPA) கீழ், அனைத்து பிராந்திய அலுவலகங்கள் மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்களையும் புதுப்பிக்க முன்மொழியப்பட்டுள்ளது, மேலும் இவை அனைத்தும் எதிர்காலத்தில் நவீனமயமாக்கப்படும்.	நவீனமயமாக்கப்பட வேண்டும்.
(இ)	அநுராதபுரம், மட்டக்களப்பு, கட்டுகஸ்தோட்டை, மகிழுப்பள்ளம், மன்னார், குருநாகல், வவுனியா, முல்லைத்தீவு, அம்பாந்தோட்டை மற்றும் காலி ஆகிய 10 வளிமண்டல பிராந்திய அலுவலகங்கள் அமைந்துள்ள பகுதிகள் 2024 டிசம்பர் 31 ஆம் திகதி வரை திணைக்களத்தால் கையகப்படுத்தப்படவில்லை.	இந்த அலுவலகங்களைத் திணைக்களத்திற்கு கையகப்படுத்த தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றன.	வளிமண்டலவியல் அலுவலகங்கள் அமைந்துள்ள நிலத்தை கையகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

5. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதல்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
வளிமண்டலவியல் திணைக்களம் நேரடியாகப் பங்களிக்கும் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடையாளம் கண்டுள்ளது, ஆனால் மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகள் மற்றும் ஒவ்வொரு இலக்கிற்கான முன்னேற்றத்தின் சதவீதமும் 2024 ஆம் ஆண்டிற்கு தனித்தனியாகக் கணக்கிடப்படவில்லை.	நுடைபெற்ற வண்ணம் உள்ளன.	பேண்தகு அபிவிருத்தி இலக்குகளுக்குரிய முன்னேற்றத்திற்குரிய சதவீதம் கணக்கிடப்பட வேண்டும்.

6. மனித வள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 டிசம்பர் 31 திகதி நிலவரப்படி, திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 460 ஆக இருந்ததுடன் மெய் ஊழியர்களின் எண்ணிக்கை 342 ஆகும், அவற்றில் 18 சிரேஸ்ட நிலை பதவிகளும், 21 மூன்றாம் நிலை பதவிகளும், 64 இரண்டாம் நிலை பதவிகளும் 15 ஆரம்ப நிலை பதவிகளும் என 118 வெற்றிடங்கள் உள்ளன. மேலும், வானிலை ஆய்வாளர் மற்றும் இலத்திரனியல் பொறியியலாளர் ஆகிய மூத்த நிலை இயக்குநர் பதவிகள் நீண்ட காலமாக வெற்றிடமாக உள்ளன. இந்தப் பதவிகளின் செயல்பாடுகள் நிறுவனத்தின் நோக்கங்களை அடைவதற்கு பெரும் பங்களிப்பைச் செய்வதால், அந்தப் பதவிகளுக்கு அதிகாரிகளை நியமிக்கத் தவறியது நிறுவனத்தின் செயல்திறன், நோக்கங்கள் மற்றும் செயல்பாடுகளை முறையாகப் பராமரிப்பதில் தடையாக உள்ளது.	தற்போதுள்ள வெற்றிடங்களை நிரப்ப நிதி அமைச்சு மற்றும் பிரதமர் அலுவலகத்தின் ஆட்சேர்ப்பு மீளாய்வுக் குழுவிடம் கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. அங்கீகாரம் கிடைத்தவுடன், ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளலாம்.	திணைக்களத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.